# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## சிறுபான்மையினர் நலன்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 – 2023

## மானியக் கோரிக்கை எண். 9


## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு | 4 |
| 3. | கல்வி உதவித் தொகை | 5 |
| 4. | சிறுபான்மையினர் விடுதிகள் | 19 |
| 5. | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | 27 |
| 6. | கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் | 30 |
| 7. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 32 |
| 8. | ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி | 37 |
| 9. | கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் | 38 |
| 10. | மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல் | 39 |
| 11. | கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல் | 40 |
| 12. | சிறுபான்மையினருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல் | 40 |

| | | |
|---|---|---|
| 13. | 5 புதிய மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகங்கள் துவங்குதல் | 41 |
| 14. | கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 41 |
| 15. | பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 42 |
| 16. | பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் | 44 |
| 17. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ) | 49 |
| 18. | தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ) | 59 |
| 19. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 61 |
| 20. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 64 |
| 21. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 82 |
| 22. | இணைப்பு | 92 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# மானியக் கோரிக்கை எண். 9

# சிறுபான்மையினர் நலன்

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2022–2023

## முன்னுரை

சிறுபான்மையின மக்களின் உரிமைகளை பாதுகாப்பதிலும், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நலன்களில் அவர்களுக்குரிய பங்கீடு கிடைப்பதை உறுதிசெய்வதிலும் நாட்டிற்கே நமது மாநிலம் முன்னோடியாக விளங்குகிறது. சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தை பேணுவதற்கு இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

சிறுபான்மையின மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் முழு கவனம் செலுத்தவும், இந்திய பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டத்தினை

நடைமுறைப்படுத்தவும், நீதியரசர் இராஜேந்திர சச்சார் குழுவின் பரிந்துரைகளுக்கு செயல்வடிவம் அளிக்கவும், சிறுபான்மையினர் நல இயக்ககம் இவ்வரசால் 2007 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மத மற்றும் மொழி சிறுபான்மையினரின் நலனையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பொருட்டு 1989-ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் அமைத்த இந்த அரசு, அவர்களது நலிந்த நிலையினை போக்கிடவும், பொருளாதார நிலையினை உயர்த்திடவும், 1999-ல் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தையும் தோற்றுவித்தது.

சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசின் கல்வி உதவித்தொகை வழங்குதல், சிறுபான்மையினர் நல விடுதிகள், உலமா மற்றும் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அளித்தல், முஸ்லிம் மற்றும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் அமைத்து

அவற்றிற்கு நிதியுதவி வழங்குதல், கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணமும், இஸ்லாமியர் ஹஜ் புனித பயணமும் மேற்கொள்ள நிதியுதவி அளித்தல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர்கள் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்குதல் போன்ற திட்டங்கள் சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஐக்கிய நாடுகளின் பொது அவையால் 2015 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகளில் (Sustainable Development Goals), இலக்கு–1 (வறுமையை ஒழித்தல்), இலக்கு–4 (தரமான கல்வி) இலக்கு–10 (ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்) ஆகியன இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் இத்துறை தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும்.

## 2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு தனி இடஒதுக்கீடு

சிறுபான்மையின சமுதாயத்தினரிடமிருந்து தனி இட ஒதுக்கீடு வழங்கக்கோரி பெறப்பட்ட பல்வேறு மனுக்களின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று பரிசீலித்த அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தினை 2007 ஆம் ஆண்டு நிறைவேற்றியது. மேலும், அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

## 3. கல்வி உதவித் தொகை

*"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்து ஊறும் அறிவு"* – *குறள் 396*

எனும் ஐயன் திருவள்ளுவரின் கூற்றுப்படி கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் பள்ளி முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்துவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஒன்றிய அரசின் கீழ்க்காணும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும்

## 3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

இத்திட்டத்திற்கான கல்வி உதவித் தொகை மாநிலங்களின் சிறுபான்மையினர் மக்கள் தொகையின் (2011) அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை திட்டங்கள் 100% ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்றன. மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பயன்மாற்று முறையில் (Direct Benefit Transfer) மாணவ/மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. மொத்த கல்வி உதவித்தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவில் குறைந்தபட்சம் 30% மாணவிகளுக்கு ஒதுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் வசிக்கும் ஒரு மாணவர், அவர் படிக்கும் இடத்தின் அடிப்படையில் அல்லாமல் அவரின் சொந்த

மாநிலத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் மட்டுமே உதவித்தொகை பெற தகுதியுடையவராவார்.

**கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு**

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி |
|---|---|---|---|
| பள்ளிப் படிப்பு | 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ.1.00 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். |
| பள்ளி மேற்படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ.2.00 இலட்சம் | |
| தகுதி (ம) வருவாய் அடிப்படை | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | ரூ.2.50 இலட்சம் | |

## 3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

இத்திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசால் 2008–2009 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டது. மதிப்பெண்களைவிட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியலின் அடிப்படையில் கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்த தேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியிலும் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி

அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியர்** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்** |
|---|---|---|
| ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை சேர்க்கைக் கட்டணம் | மாணவரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.500 (இவற்றில் எது குறைவோ) | |
| ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கற்பிப்பு கட்டணம் | மாணவரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.3,500 (இவற்றில் எது குறைவோ) | |
| ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கான பராமரிப்பு கட்டணத் தொகை | | |
| (i) 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | – | ரூ. 1000 |
| (ii) 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ.6000 | ரூ. 1000 |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 2,12,604 மாணவர்கள், 2,33,965 மாணவியர் மற்றும் 71 திருநங்கைகள் என மொத்தம்

4,46,640 நபர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.8,611.96 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை

மேல்நிலைப் பள்ளிக்கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசால் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித்தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டது. மதிப்பெண்களைவிட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட

தகுதி பட்டியலின் அடிப்படையில் கல்வி உதவித்தொகை ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்த தேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியிலும் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| விவரம் | கற்பிப்பு மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ. | பராமரிப்பு கட்டணம் (ஒரு கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயலும் மாணவ/ மாணவியர் ரூ. | விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ. |
| 11 மற்றும் 12 ஆம் வகுப்பு | மாணவரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.7,000(இவற்றில் எது குறைவோ) | 3800 | 2300 |
| 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தொழில்நுட்ப / தொழிற்கல்வி படிப்புகள், ஐ.டி.ஐ / ஐ.டி.சி (என்.சி.வி.டி படிப்புகள் உட்பட) பாலிடெக்னிக், செவிலியர் டிப்ளமோ, ஆசிரியர் பயிற்சி போன்றவை. | மாணவரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.10,000 (இவற்றில் எது குறைவோ) | 3800 | 2300 |
| இளநிலை / முதுகலை | மாணவரால் செலுத்தப்பட்ட | 5700 | 3000 |

| | | | |
|---|---|---|---|
| பட்டப்படிப்புகள் (தொழில்நுட்பம் மற்றும் தொழிற்கல்வி தவிர) | கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.3,000 (இவற்றில் எது குறைவோ) | | |
| எம்.பில் மற்றும் பி.எச்.டி. | - | 12000 | 5500 |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 20,047 மாணவர்கள், 31,777 மாணவியர் மற்றும் 4 திருநங்கைகள் என மொத்தம் 51,828 நபர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.2,882.54 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிலும் தமிழகத்தை சார்ந்த ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட மதவழி சிறுபான்மையினராக கருதப்படும் இஸ்லாமியர், கிறித்துவர், சீக்கியர்,

புத்தமதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு ஒன்றிய அரசு நிதி உதவியுடன் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் 2007–2008 முதல் செயல்படுத்தப்படுகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. பட்டியலிடப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயில்பவர்களுக்கு (ஐஐடி, ஐஐஎம் போன்றன) கல்வி உதவித் தொகைகள் முதலில் ஒப்பளிக்கப்படும். பிற மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் அதாவது முந்தைய படிப்பு (மேல்நிலை/பட்டப்படிப்பு) தேர்வில், அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. மதிப்பெண்கள் சமமாக இருப்பின், பெற்றோர்/

பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியிலும் பயிலும் நிலையில்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இக்கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி) – சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி) – திருச்சி
3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்) – காஞ்சிபுரம்
4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி) – சென்னை

5. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்) – திருச்சி

உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படும்.

ஏனைய அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்விக் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **விடுதியில் தங்கி பயிலும் மாணவ/ மாணவியர்** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர்** |
|---|---|---|
| கல்வி கட்டணம் | மாணவரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.20,000 (இவற்றில் எது குறைவோ) | |
| பராமரிப்பு கட்டணம் (10 மாதங்களுக்கு) | ஆண்டுக்கு ரூ. 10000 | ஆண்டுக்கு ரூ. 5000 |

| | |
|---|---|
| பட்டியலிடப்பட்ட கல்வி நிறுவனங்கள் (ஐஐடி, ஐஐம், முதலான) | செலுத்தப்பட்ட கல்வி கட்டணம் முழுவதும் மாணவருக்கு திருப்பி செலுத்தப்படும் (உச்சவரம்பின்றி) |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 4,199 மாணவர்கள், 2,622 மாணவியர்கள் மற்றும் 1 திருநங்கை என மொத்தம் 6,822 நபர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.1,737.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 3.4 பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகை

சிறுபான்மையின சமூகத்தை சார்ந்த கல்வியில் சிறந்து விளங்கும் மாணவிகளை அங்கீகரித்து அவர்கள் பள்ளி படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பினை தொடர்ந்து பயில ஊக்கம் அளிக்கும் வகையில் 'பேகம் ஹஸ்ரத் மஹால் தேசிய கல்வி உதவித்தொகை திட்டம்' 2003 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு சிறுபான்மையின விவகார

அமைச்சகத்தின் மௌலானா ஆசாத் கல்வி அறக்கட்டளை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினருக்கான பிற கல்வி உதவித் தொகை திட்டங்களுடன் இணைந்து விரைவாக செயல்படுத்தும் நோக்கில் இத்திட்டம் 2021−2022 ஆம் ஆண்டு முதல் தேசிய கல்வி உதவித் தொகை இணையத்தில் (National Scholarship Portal) இணைக்கப்பட்டு ஒன்றிய அரசின் 100% நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

9 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.5000 மும், 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு வரை வருடத்திற்கு ரூ.6000 மும் மாணவிகளின் வங்கி கணக்கில் நேரடி பயன் மாற்று முறையில் வழங்கப்படும். இந்த கல்வி உதவித் தொகையில் சேர்க்கை, கற்பிக்கும் கட்டணம், புத்தகங்கள், எழுது பொருள் மற்றும் உண்டி உறைவிடம் ஆகிய செலவினங்கள் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 6,879 விண்ணப்பங்கள் மாணவியரிடமிருந்து பெறப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 4. சிறுபான்மையினர் விடுதிகள்

தமிழ்நாட்டில் சிறுபான்மையின மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து பயில ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 18 விடுதிகள் இயங்கி வருகின்றன.

விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| விடுதி | விடுதிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கல்லூரி | 9 | 900 | 585 |
| பள்ளி மற்றும் கல்லூரி | 5 | 250 | 201 |
| பள்ளி | 4 | 350 | 180 |
| **மொத்தம்** | **18** | **1500** | **966** |

மொத்தமுள்ள 18 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி ஆகும் (திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள ஆம்பூர் கல்லூரி மாணவர் விடுதி), 17 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும். விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. இவ்விடுதிகளில் சேருவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் முகாம் வாழ் இலங்கை தமிழர்களின் குழந்தைகளுக்காக ஒவ்வொரு

விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மேலும் மீட்கப்படும் குழந்தை தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எவ்வித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கி பயிலவும் அனுமதிக்கப்படுவர்.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரளா எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு, அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

### 4.1 உணவுக் கட்டணம்

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருள் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1000/- ஆகவும் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு உணவுக் கட்டணம் ரூ.1100/-ஆகவும் ஓராண்டில் 10 மாதங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை நாட்களில் (கிறிஸ்துமஸ், ரம்ஜான், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா) விடுதி மாணவ, மாணவியருக்கு சிறப்பு உணவு கட்டணமாக, ஒரு பண்டிகைக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி மாணவ, மாணவியருக்கு சிறப்பு உணவு கட்டணமாக ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சோப்பு மற்றும் பற்பசை போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி மாணவ,

மாணவியருக்கு ரூ.100/- ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.150/- ஆகவும் மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டில் மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.270.22 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.397.57 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு இலவச சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.

2. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்று வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் இலவசமாக பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

4. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

5. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

6. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் தண்ணீர் குவளைகள் (tumbler) வழங்கப்படுகின்றன.

7. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

8. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி

மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

9. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

10. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதாரகுட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

11. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

12. விடுதி மாணவ/மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள் வழங்கப்படுகின்றன.

முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

13. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

## 4.3 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 18 விடுதிகளில் 10 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 8 விடுதிகளில் 3 விடுதிகளுக்கு ஏற்கனவே சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு பொதுப்பணித் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எஞ்சிய 5 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு விடுதி மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்காக 2022–2023 ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நலத்துறைக்கு ரூ.300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. 2021–2022 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ.14.50 இலட்சம் செலவில் 3 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

## 5. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

ஆதரவற்ற முஸ்லீம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி அவர்களுக்கு உதவும்பொருட்டு கர்நாடக நவாப் அவர்களால்

"முகமதியன் கோஷா விதவை சாரிட்டி" என்ற பெயரில் 1.10.1892ல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்" என்று மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம் 12.8.1976– இல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

மேற்கண்ட சென்னை மாவட்ட சங்க அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராகக் கொண்டு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007 ஆம் ஆண்டு அரசால் ஏற்படுத்தப்பட்டன.

2021–2022 ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் கூடுதலாக முஸ்லீம் மகளிர் உதவும்

சங்கம் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, தேனி, கிருஷ்ணகிரி மற்றும் விழுப்புரம் ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் கூடுதலாக துவங்கிட ஆணையிடப்பட்டு இம்மூன்று சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தவிர தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள், கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு

வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ. 436.11 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.433.11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்**

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், கணவரால் கைவிடப்பட்ட கிறித்துவ மகளிர் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2021 – 2022 ஆம் ஆண்டில் தேவையின் அடிப்படையில் கூடுதலாக கிறித்துவ மகளிர் உதவும்

சங்கங்கள் அமைக்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய 3 மாவட்டங்களில் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் கூடுதலாக துவங்கிட ஆணையிடப்பட்டு இம்மூன்று சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான கிறித்துவ விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் கிறித்துவ மகளிர் ஆகியோருக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தவிர தையல், பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்கள் சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி

ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2021–2022 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.247.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள், அடக்கஸ்த்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும்

முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009–ஆம் ஆண்டில் அரசால் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2021–2022 ஆம் ஆண்டில் 1,397 புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு, இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 13,963 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2021–2022 ஆம் ஆண்டில் 627 பயனாளிகளுக்கு ரூ.39.33 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை |
|---|---|---|
| 1 | **விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்**<br>அ. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித் தொகை<br>ஆ.விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ. 1,00,000<br><br>ரூ .10,000 முதல் ரூ .1,00,000 வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | ரூ .20,000 |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ .5, 000 |

| | | |
|---|---|---|
| 4 | **கல்வி உதவித்தொகை**<br>அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ .1,000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ .1,000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ .1,000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ .1,500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ .1,500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | ரூ .1,500 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | ரூ .1,750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ .4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ .5,000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு | ரூ .4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு | ரூ .6,000 |
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ .6,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | ரூ .8,000 |
| | ஒ. ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ .1,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | ரூ .1,200 |

| | | |
|---|---|---|
| 5 | திருமண உதவித்தொகை<br>ஆண்கள்<br>பெண்கள் | <br>ரூ .3,000<br>ரூ .5,000 |
| 6 | **மகப்பேறு உதவித்தொகை**<br>அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம்<br>ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | <br>ரூ .6000<br><br>ரூ .3000 |
| 7 | கண் கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | ரூ .500 (அதிகபட்சம்) |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ .1000 |

இவ்வாரியத்தில் இதுவரையில் 4,479 பயனாளிகளுக்கு ரூ.180.92 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 7.1 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு மிதிவண்டிகள் வழங்குதல்

2021-2022 ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினராக உள்ள நபர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, இவ்வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.476.23 இலட்சம் செலவில்

மிதிவண்டிகள் வழங்க ஆணை வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 7.2 பதிவுபெற்ற வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்

வஃக்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வஃக்பு நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இருசக்கர வாகனம் வாங்க மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.25000/- இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.703.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 8. ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழ்

பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ரூ.60,000மும் மற்ற நபர்களுக்கு ரூ.37,000மும் நிதி உதவி வழுங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

2022–23 ஆம் ஆண்டிற்கு ரூ.120 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கு மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென இதுவரை ரூ.700 இலட்சம்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 மாவட்டங்களில் உள்ள 25 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.65.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 11. கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைத்தல்

இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்கள் கோரிக்கையின் அடிப்படையில், கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு அரசால் ரூ.100 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## 12. சிறுபான்மையினருக்கு தையல் இயந்திரங்கள் வழங்குதல்

பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறுபான்மையினர் வகுப்பைச் சார்ந்தவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 1000 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் இலவசமாக வழங்க 2021-2022 ஆம் ஆண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி, மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்க

ஆணையிடப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 13. 5 புதிய மாவட்ட சிறுபான்மையினர் அலுவலகங்கள் துவங்குதல்

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் சென்னை, வேலூர், விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களில், புதிய பணியிடங்களுடன் மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலகங்கள் ரூ.175.05 இலட்சம் செலவில் தோற்றுவிக்க 2021–2022 ஆம் ஆண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன்படி, புதிய பணியிடங்களுடன் அலுவலகங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

## 14. கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்

கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நலனுக்காக நல வாரியம் அமைக்க 2021–2022 ஆம் ஆண்டில்

அறிவிப்பு வெளியிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 15. பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்

சிறுபான்மையினரின் மக்கட் தொகைக்கு ஏற்ப தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வெவ்வேறு துறைகள் மூலமாக இத்திட்டங்கள் செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் மதிப்பாய்வு செய்து வருகின்றன.

## 15.1 15 அம்ச திட்டங்கள்

1. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்;
2. பள்ளிக் கல்வியை பெறுவதற்கான வாய்ப்பு;
3. உருது மொழியை கற்பிப்பதற்கான வசதியை ஏற்படுத்தல்;
4. மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல்;
5. சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்;
6. மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல்;
7. சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத்திட்டம்;
8. தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல்;
9. பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி;
10. மாநில மற்றும் ஒன்றிய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு;

11. ஊரக வீட்டு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு;
12. சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படுத்தல்;
13. இனக்கலவரங்களைத் தடுத்தல்;
14. இனக்கலவரத்தினை தூண்டுவோர் மீது குற்ற விசாரணை நடத்துதல்; மற்றும்,
15. இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்குதல்.

## 16. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்–PMJVK)

பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதிலும் மற்றும் ஏற்றத் தாழ்வினை

குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் (25% சிறுபான்மையினராக இருந்தால்) என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் கண்டறியப்பட்டுள்ள பின்வரும் 4 ஊராட்சிகள் மற்றும் 18 நகர்ப்புறங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**1.ஊராட்சிகள்**

| **வ. எண்** | **மாவட்டம்** | **ஊராட்சிகள்** |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | திருவாடானை |
| 2. | இராமநாதபுரம் | மண்டபம் |
| 3. | நீலகிரி | கூடலூர் |
| 4. | புதுக்கோட்டை | மணமேல்குடி |

**2. நகர்புறங்கள்**

| **வ. எண்** | **மாவட்டம்** | **வ.எண்** | **நகர்புறங்கள்** |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் | 1. | குறிச்சி |
| | | 2. | குனியமுத்தூர் |
| 2. | திண்டுக்கல் | 3. | திண்டுக்கல் |
| 3. | வேலூர் | 4. | வேலூர் |
| | | 5. | பேரணாம்பட்டு |
| 4. | இராணிப்பேட்டை | 6. | மேல்விஷாரம் |
| 5. | நாகப்பட்டினம் | 7. | நாகப்பட்டினம் |
| 6. | இராமநாதபுரம் | 8. | கீழக்கரை |
| 7. | திருநெல்வேலி | 9. | திருநெல்வேலி |
| 8. | தூத்துக்குடி | 10. | தூத்துக்குடி |
| | | 11. | காயல்பட்டினம் |
| 9. | திருப்பத்தூர் | 12. | ஆம்பூர் |
| | | 13. | வாணியம்பாடி |
| 10. | கரூர் | 14. | பள்ளப்பட்டி |
| 11. | தென்காசி | 15. | தென்காசி |

| | | | |
|---|---|---|---|
| | | 16. | கடையநல்லூர் |
| 12. | கன்னியாகுமரி | 17. | கொல்லங்கோடு |
| | | 18. | நாகர்கோயில் |

இத்திட்டம் ஒன்றிய மற்றும் மாநில அரசின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33–40 சதவீதம் பெண்கள் / பெண்குழந்தைகளுக்கான கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காக செலவிடப்படும்.

இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart class room), அரசு தொழிற்பயிற்சி நிலையம் / தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டடங்கள், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில

அரசின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 10 மாவட்டங்களில் ரூ.61,575.41 இலட்சம் மதிப்பிலான 62 திட்டங்களை செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் கட்ட தவணையாக ஒன்றிய அரசின் பங்களிப்பாக ரூ.18,422.22 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.1000 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 17. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டாம்கோ)

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் சமணர்கள் ஆகியோர்கள் பயன் பெறும் வகையில் இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் 31.08.1999 இல் பதிவு செய்யப்பட்டது. சிறுபான்மையினர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பிரதான குறிக்கோள் ஆகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும். இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையினர்

வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

தனிநபர் காலக் கடன், விரசாத் கடன் (கைவினை கலைஞர் கடன்) மற்றும் சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறுகடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தேசிய கழகத்தின் பங்கு | – | 90 % |
| டாம்கோவின் பங்கு | – | 5 % |
| பயனடைவோரின் பங்கு | – | 5 % |

## 17.1 தனிநபர் காலக்கடன் திட்டம்.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் /வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகிறது.

| **வ. எண்** | **கடன் தொகை** | **வட்டி விகிதம்** (ஆண்டொன்றுக்கு) | **ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| 1 | **திட்டம் I**<br>ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | **திட்டம் II**<br>ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் – 8%<br>பெண் – 6% | திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 2,002 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.1,335.95 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 17.2. விராசாத் –கைவினை கலைஞர் கடன் திட்டம்

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின கைவினை கலைஞர்கள், தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் விராசாத் கடன் – (கைவினை கலைஞர் கடன்) குறைந்த வட்டி விகிதத்தில், மூலப்பொருட்களை வாங்குவதற்காக, உபகரணங்கள் / கருவிகள் / இயந்திரங்கள் வாங்குவதற்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | விராசாத் கைவினை கலைஞர் கடன் | ஆண்– 5%<br>பெண்– 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | திட்டம் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கப்படுகின்றன. | | ரூ.1.20 இலட்சம் |

## 17.3 சுய உதவிக் குழுக்களுக்கான சிறு கடன் திட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், ஆண் மற்றும் பெண் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட, சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.1 இலட்சம் வரை (சுய | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | | ரூ. 1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II ரூ.1.5 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண்– 10% பெண்– 8% | திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்கள் மூலம் 4,025 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.2,273.84 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 17.4 கல்விக் கடன்.

அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன் வழங்கப்படுகின்றன.

| வ. எண் | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டிற்கு) | பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | <u>**திட்டம் I**</u><br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் "தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ. 1.20 இலட்சம் |
| 2 | <u>**திட்டம் – II**</u><br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்களுக்கு 8%<br>மாணவியருக்கு 5% | திட்டம் I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டில் 7 மாணவ/ மாணவியருக்கு ரூ.8.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம் மொத்தம் 6,034 பயனாளிகளுக்கு ரூ.3618.29 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 17.5. திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "கௌஷல் சி குஷல்தா"

சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சிகளின் மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.6 இலட்சத்துக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தேசிய திறன் மேம்பாட்டுக்

கழகம்/தொடர்புடைய துறை திறன் கவுன்சில்/மாநில திறன் மேம்பாட்டுக் கழகம்/தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் 200 மணி நேரம் முதல் 250 மணி நேரம் வரை பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை தையல் கலை (Tailoring) பொருள்கள் மற்றும் துணிகள், பிரி அசெம்பிளி ஆப்ரேட்டர் மற்றும் தையல் பூ வேலைபாடுகள் (எம்பிராய்டரி) ஆகிய மூன்று வகையான பயிற்சிகளுக்கு ஆயத்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (ATDC) மற்றும் மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) ஆகிய இரண்டு பயிற்சி நிலையங்கள் மூலம் மொத்தம் ரூ.30.72 இலட்சம் செலவில் 250 பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்

கழகம் ஒப்புதல் அளிக்கப் பெற்று பயிற்சிகள் நடைபெற்றன.

### 17.6. மகிளா சம்ரிதி யோஜனா (Mahila Samridhi Yojana)

மகிளா சம்ரிதி யோஜனா திட்டத்தின் கீழ், இக்கழகம் மூலம் மகளிர் சுய உதவிக்குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு சிறு தொழில்களான தையல், துணி வெட்டுதல், மற்றும் எம்பிராய்டரி ஆகியவற்றிற்கு பயிற்சிகள் அளித்து, பின்னர் அவர்களுக்கு ரூ.1 இலட்சம் வரை ஆண்டிற்கு 7% ஆண்டு வட்டி விகிதத்தில் கடன் உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021–2022 ஆம் ஆண்டிற்கு, மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதி கழகம் (NMDFC) பரிந்துரை செய்ததில், தேசிய கழகத்தால், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள இரண்டு தையல் பயிற்சி

நிலையங்களுக்கு 6 மாத கால தையல் பயிற்சி வகுப்புகளை 40 நபர்கள் பயனடையும் வகையில் மொத்தம் ரூ.6 இலட்சம் மதிப்பில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழிவழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும் தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக "தமிழ்நாடு மொழிவழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்" (டால்மெட்கோ) 2021 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்தின் அங்கிகரிக்கப்பட்ட பங்கு தொகை (Authorised Capital) ரூ.900 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய சட்டம் 2010, பிரிவு 2 (d)–ன் கீழ் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டு தெலுங்கு, உருது, கன்னடம், மலையாளம், சௌராஷ்ட்ரம் மற்றும் மராத்தி ஆகிய மொழிகளை தாய்மொழியாக கொண்டவர்களை மொழிவழி சிறுபான்மையினர் என தமிழ்நாடு அரசால் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இக்கழகத்திற்கு செலுத்தப்பட்ட பங்கு மூலதனமாக ரூ.500 இலட்சமும், விதைத் தொகையாக ரூ.1,000 இலட்சமும், சம்பளம் மற்றும் இதர நிர்வாகச் செலவுகளுக்காக ரூ.109.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1,609.20 இலட்சம் நிதியினை அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## 19. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டபூர்வ ஆணையமாகும்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (தமிழ்நாடு சட்டம் 21/2010) தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டு, தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 01.08.2010 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆணையம், சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள

உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மத நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

இவ்வாணையம் திரு. S. பீட்டர் அல்போன்ஸ் அவர்களை தலைவராகவும், Dr. மஸ்தான் அவர்கள் துணைத் தலைவராகவும் மற்றும் 8 உறுப்பினர்களுடனும் 2021 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.

சிறுபான்மையின மக்கள் மற்றும் சிறுபான்மையின நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை அழைத்து நேரடி விசாரணை செய்து அவர்கள் அளிக்கும் கோரிக்கைகள் மீது தொடர்புடைய அரசுத் துறைகளிடமிருந்து அறிக்கைகளை இந்த ஆணையம் பெறுகிறது. சிறுபான்மையினரின்

பிரச்சனைகளை கண்டறியும் பொருட்டு மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளை பார்வையிட்டு நலத்திட்டங்களை திறம்பட செயல்படுத்திட அரசுக்கு தக்க பரிந்துரைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் செய்து வருகிறது.

**மாவட்டங்களில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையின ஆணையத்தின் கள ஆய்வுப்பணி**

இவ்வாணையம் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, தென்காசி, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு சென்று சிறுபான்மையினரின் கோரிக்கையை கேட்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது. இக்கூட்டங்களில் சுமார் 2,400 நபர்கள் பங்கேற்று மனுக்கள் வழங்கினார்கள்.

## 20. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம், 1954-ன்படி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995-ம் ஆண்டு வக்ஃப் சட்டத்தின்படி (மைய அரசு சட்டம் 43/1995), 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியம் திருத்தியமைக்கப்பட்டு, தற்போது வாரியம் 11 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. திரு.எம்.அப்துல் ரஹ்மான் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக, உறுப்பினர்களால் 22.07.2021 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு மாவட்ட அளவில் 11 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

### 20.1 குறிக்கோள் மற்றும் பணிகள்

வக்ஃப் சட்டம் 1995-ன் கீழ் வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வதில் பங்காற்றுதல் மற்றும் வக்ஃப் நிறுவனங்களுடன்

நெருக்கமாக செயல்பட்டு அவைகளின் செயல்பாட்டினை மேம்படுத்துதல்.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவு (ஆவணங்கள்) பேணுதல்.
2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப்படுகிறதா என்று உறுதி செய்தல்.
3. வக்ஃப் நிர்வாகத்திற்காக ஆணைகள் மற்றும் கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் தீட்டிக் கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டை ஆய்வு செய்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் நிதியை நிர்மானித்தல்.

10. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கேட்டல்.
11. வக்ஃப் சொத்துக்கள், கணக்குகள் ரிகார்டுகள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.
12. வக்ஃப் சொத்தின் தன்மை பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃப் சொத்துக்களை அளவை செய்தல்.
13. வக்ஃப்களை பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களை பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு நிதி வழங்குதல், உலமாக்கள் ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் 1986ம் ஆண்டு முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டத்தின்படி விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு வாழ்க்கைச் செலவுத்

தொகை வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ்.வக்ஃப் வாரிய கல்லூரி இயங்கி வருகிறது.

## 20.2 வக்ஃப் பதிவு

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின் கீழ் 7,504 வக்ஃபுகள் உள்ளன. அதில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 3,470 வக்ஃப்கள் ஆகும். பதிவு செய்யப்படாத 4,034 வக்ஃப்களும் உள்ளன. 2021–2022 ஆம் ஆண்டில் 52 புதிய வக்ஃப்கள் புதிதாக உருவாக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன. பதிவு செய்யப்பட்டுள்ள வக்ஃப்களின் விபரம் கீழ்கண்டவாறு:–

| | | |
|---|---|---|
| 1. | ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்கள் | 2814 |
| 2. | கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்கள் | 604 |
| 3. | கடந்த ஆண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டவை | 52 |
| | **மொத்தம்** | **3470** |

## 20.3 வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம், 1995, பிரிவு 4–ன்படி, வக்ஃப் சொத்துக்களை சர்வே செய்வதற்காக நில அளவை ஆணையரை வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்தது. மாவட்ட வருவாய் அதிகாரிகள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் ஆணையராக நியமனம் செய்யப்பட்டார்கள்.

அரசு உத்தரவின்படி, மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954ம் ஆண்டு வக்ஃப் சட்டப்படி தயாரிக்கப்பட்ட வாரிய பதிவேடுகளில் இருந்து எடுக்கப்பட்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும், சென்னை மாவட்ட ஆட்சி தலைவரின் நேர்முக உதவியாளருக்கும் ஏற்கனவே ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள் மாவட்ட வருவாய்

அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு பின்னர் நில அளவை ஆணையரால் 27 மாவட்டங்களில் நில அளவை பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மீதமுள்ள மாவட்டங்களில் நில அளவை பணிகள் நடைபெற்று வருகிறது.

## 20.4 வக்ஃப் தீர்ப்பாயம் அமைத்தல்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83 இன் படி, வக்ஃப் மற்றும் அதன் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்காக, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தை அமைத்தது. இத்தீர்ப்பாயம், மாவட்ட நீதிபதியை தலைவராகவும், கூடுதல் மாவட்ட குற்றவியல் நடுவருக்கு இணையான மாநில குடிமை பணி அலுவலர் நிலையில் ஒரு உறுப்பினரையும், முஸ்லீம் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும்

கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் வழக்குகள் விவரம்:–

| 31.03.21 வரை நிலுவையில் இருந்த வழக்குகள் | 2021–22 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | மொத்தம் | 2021–22 ல் தீர்ப்பளிக்கப் பட்டவை | தற்போது நிலுவையிலுள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| 2445 | 931 | 3376 | 1076 | 2300 |

## 20.5 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்ஃப்கள்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 65 இன் படி நிர்வாக காரணங்களுக்காக, சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்டு, இவ்வக்ஃப்களை நிர்வகிக்க, நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு துவக்கத்தில் 85 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இருந்தன. இவற்றில் வாரிய உத்தரவின்படி கடந்த ஆண்டில் 36 வக்ஃப் நிறுவனங்களின் நேரடி நிர்வாகத்தினை

விலக்கி, தேர்வுற்ற மற்றும் நியமிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது மற்றும் 6 வக்ஃப் நிறுவனங்கள் புதிதாக வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்டன. எனவே, தற்போதைய நிலையில், 55 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

## 20.6 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துகக்ளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

வக்ஃப் சட்டம், 1995, பிரிவு 54 மற்றும் பொது வளாகங்கள் (அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றுதல்) சட்டம், 1995 ஆகியவற்றின் கீழ் வக்ஃப் சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது 16 லட்சம் சதுர அடியிலான ரூ.15,800 இலட்சம் மதிப்பிலான வக்ஃப் சொத்துக்கள், ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டு

சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், தனி நபர்கள் வக்ஃப் வாரியத்திடம் தடையில்லா சான்று பெறாமல் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதை தடுத்திட, தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு பதிவு சட்டம், 1908 பிரிவு 22–Aன்படி ஆட்சேபணை கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

## 20.7 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.250 லட்சம் மாநில அரசு நிர்வாக மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 2022–2023 ஆம் ஆண்டு முதல் வசூலித்த சகாயத்தொகை அடிப்படையில், 5% ஊக்கத் தொகையை கூடுதல் நிர்வாக

மானியமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 20.8 தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலங்கள் கட்ட மானியம்

2021–2022 ஆம் ஆண்டில் பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 8 சரக அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒவ்வொரு மண்டல அலுவலகக் கட்டடத்திற்கும் தலா ரூ.16 லட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடு செய்யப்பட்டு, முதற்கட்டமாக, பூந்தமல்லி, வேலூர், ராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய 4 இடங்களில் சரக அலுவலகங்கள் கட்டுவதற்கு ரூ.64 லட்சத்தை அரசு அனுமதித்து மானியம் வழங்கியுள்ளது.

### 20.9 மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான பராமரிப்பு

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4 (2)ன்படி, நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், மணவிலக்கு பெற்ற 7 முஸ்லிம் பெண்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.67,800–யினை வாரியம் வழங்கி வருகிறது.

### 20.10 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

#### 20.10.1 உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டம் 1981–ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஏழை பேஷ் இமாம்கள், மோதினார்கள், அரபு ஆசிரியர்கள் மற்றும்

முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணி முடித்தவர்கள் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள். உலமா ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு தற்போது உலமா ஓய்வூதியம் மாதம் ரூ.3,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. வக்ஃப்களுக்கான மாண்புமிகு அமைச்சரின் தலைமையில் உள்ள உலமா ஓய்வூதிய அனுமதிக் குழு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதி வழங்கும் அதிகார அமைப்பாகும். இக்குழு 1,314 உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டிற்கு ரூ.475.68 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 20.10.2 மசூதிகள் மற்றும் தர்க்காக்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

மசூதிகள், தர்க்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. இம்மானியம் 2021–2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டு ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 70 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைகின்றன. மேலும், 2022–2023 ஆம் ஆண்டிற்கான பழமையான மசூதிகள் மற்றும் தர்காக்களை பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் அரசு ரூ.600 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### 20.10.3 தொகுப்பு நிதி – வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு

மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பெரிய பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.300 இலட்சத்தில் தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் திரட்டப்படும் வட்டியானது, தேவைப்படும் மற்றும் தகுதியான வக்ஃப் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் வழங்கப்படும்.

### 20.10.4 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்.

தமிழகத்தில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000 மதிப்பூதியம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டிற்கு ரூ.74.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20.11 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் மத்திய வக்ஃப் கழக உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 20.11.1 குவாமி வக்ஃப் போர்டு தரக்கியாத்தி திட்டம்

மாநில வக்ஃப் வாரியங்களின் செயல்பாடுகளை வலிமைப்படுத்தும் விதமாக, வக்ஃப் வாரிய பணிகளில் திறன் மேம்பாட்டினை கொண்டு வர புதுடெல்லி, மத்திய வக்ஃப் கழகத்தால் **"குவாமி வக்ஃப் போர்டு தரக்கியாத்தி திட்டம்"** தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின்

வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கணினி உதவி புரோகிராமர், சட்ட அலுவலர்கள், கணக்காளர், நில அளவையாளர்கள், சரக வக்ஃப் அலுவலர் ஆகியோர்களை நியமிக்க வேண்டியும், வக்ஃப் சொத்துக்களை GIS முறையில் கண்டறியும் பணிகளை மேற்கொள்ளவும், மையப்படுத்தப்பட்ட கணினி வசதிகளை ஏற்படுத்தவும், வக்ஃப் முத்தவல்லிகளின் பணிகள் மற்றும் ஒன்றிய அரசால் வழங்கப்படும் திட்டங்களின் வாயிலாக வக்ஃப் சொத்துக்களில் அபிவிருத்தி மேற்கொண்டு வக்ஃபின் வருவாய் பெருக்கும் வழிவகைகளுக்குண்டான பயிற்சி முகாம்களை முத்தவல்லிகளுக்கு நடத்திடவும் மத்திய வக்ஃப் கழகம் உதவி வருகிறது. இதன்படி மத்திய வக்ஃப் கழகம் 2019–2020–ஆம் ஆண்டிற்கு ரூ.102 இலட்சமும் மற்றும் 2020–2021 ஆண்டிற்கு ரூ.86 இலட்சம் மானியமாக வழங்கி இத்திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும்

வக்ஃப் சொத்துக்களின் ஆவணங்களை 100% கணினிமயமாக்கும் பணி பூர்த்தியடைந்துள்ளது. மேலும், 13,400 வக்ஃப் சொத்துக்கள் GPS/GIS மேப்பிங் பணிகள் செய்யப்பட்டு, அதில் 13,000 வக்ஃப் சொத்துக்கள் மத்திய வக்ஃப் கழக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, தற்போது 9,070 வக்ஃப் சொத்துக்களின் விவரங்களை மத்திய வக்ஃப் கழக இணையதளம் www.wamsi.nic.in மூலம் அறிந்து கொள்ள இயலும்.

### 20.11.2 வக்ஃப் சொத்துக்களை ட்ரோன்களை (Drone) பயன்படுத்தி மேப்பிங் செய்தல்

தமிழகத்தில் உள்ள வக்ஃப் சொத்துக்களை ட்ரோன்களை (Drone) பயன்படுத்தி G.P.S./G.I.S மேப்பிங் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

20,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS mapping பணிகளுக்காக மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் இன்ஸ்ட்டிடியூட் ஆஃப் ரிமோட் சென்சிங், அண்ணா பல்கலைக்கழகம்,

சென்னை ஆகியவற்றுடனும்; 15,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS mapping பணிகளுக்காக மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் ஜவஹர்லால் டெக்னாலாஜிகல் யூனிவர்ஸிட்டி, ஹைதராபாத் ஆகியவற்றுடனும் மற்றும் 25,000 வக்ஃப் சொத்துக்களின் GPS/GIS mapping பணிகளுக்காக மத்திய வக்ஃப் கழகம், புதுடெல்லி, தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் சென்னை பல்கலைக்கழகம், புவியியல் துறை ஆகியவற்றுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 20.11.3 சஹாரி வக்ஃப் சம்பத்தி விகாஸ் யோஜனா

மத்திய வக்ஃப் கழகம் வக்ஃப் நிறுவனங்களின் அபிவிருத்திக்காக இத்திட்டத்தின் கீழ் கடன் அடிப்படையில் நிதியுதவி வழங்கி வருகிறது. சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் வக்ஃப் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில்

அபிவிருத்தி மேற்கொள்ளும் இடமானது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.200 இலட்சம் அல்லது திட்ட மதிப்பீட்டில் 75% எது குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக வசூலிக்கப்படும். மேலும், இதன் விவரங்கள் மத்திய வக்ஃப் கழகத்தின் இணைய தளம் www.centralwaqfcouncil.gov.in–ல் அறிந்து கொள்ள தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முத்தவல்லிகளுக்கும் வக்ஃப் சரக அலுவலர்கள் மூலமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

**20.11.4 தேசிய வக்ஃப் மேம்பாட்டு** கழகம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி,

தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியாக மேம்படுத்துவதற்கு தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் (NAWADCO) நிதி உதவி வழங்கி வருகிறது. இதன் மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகித்தாச்சார அடிப்படையில் தேசிய வக்ஃப் மேம்பாட்டு கழகம் மற்றும் தொடர்புடைய வக்ஃப் நிறுவனம் ஆகியன குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 21. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

சவூதி அரேபியாவிலுள்ள புனித மக்கா நகருக்கு ஹஜ் பயணம் மேற்கொள்பவரின் பயண ஏற்பாடுகள் மற்றும் தங்குமிட ஏற்பாடுகளை நல்லமுறையில் மேற்கொள்ள 2002 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் ஹஜ் குழு சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, அரசால், மூன்று

ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

## 21.1 மாநில ஹஜ் குழுவின் பணிகள்

1. ஒன்றிய அரசின் சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சகம் மற்றும் மும்பையில் உள்ள இந்திய ஹஜ் குழு ஆகியவற்றின் அறிவுறுத்தலின்படி, விண்ணப்பதாரரிடமிருந்து ஹஜ் விண்ணப்பங்களை 100% நிகழ்நிலை (online) மூலம் பெறும் முறையை செயல்படுத்துதல்.

2. ஒதுக்கீட்டிற்கு மேல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், மனுதாரர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

3. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய பயணக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் குறித்து உரிய அறிவுரைகளை விண்ணப்பதாரர்களுக்கு அளித்தல்.

4. சிறந்த தங்குமிடங்களை தேர்ந்தெடுப்பதற்காக இந்திய உதவித் தூதரகத்திற்கு உதவிடும் பொருட்டு ஒவ்வொரு வருடமும், பிரதிநிதிகளை கட்டிடத் தேர்வுக் குழுவில் அனுப்புதல்.

5. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு வருடமும் ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

6. ஹஜ் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் புனிதப் பயணிகளுக்கு தேவைப்பட்டால் (ஹஜ்) கடவுச்சீட்டை பெறுவதற்கு மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

7. தமிழ் மொழியில் ஹஜ்ஜும் உம்ராவும் என்ற கையேட்டியினை அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

8. ஒன்றிய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்களுடனும் மற்றும் பிற

நிறுவனங்களான சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்து ஹஜ் விமான ஏற்பாடுகளை சீரிய முறையில், சிக்கலின்றி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.

9. சென்னை–ஜித்தா–சென்னை நேரடி ஹஜ் விமானங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் உதவி ஏற்பாடுகளான தங்கும் வசதி மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி முதலியவற்றை அளித்தல்.

10. புனிதப் பயணிகள் பயனடையும் பொருட்டு, தடுப்பூசி மற்றும் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பல்வேறு மாவட்ட/வட்ட தலைமை இடங்களில் நடத்துதல்.

11. ஹஜ் புனிதப் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

## 21.2 ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகள்

ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் / இந்திய ஹஜ் குழுவின் வழிமுறைகளின்படி, விண்ணப்பங்களுக்கான அழைப்பு, இந்திய ஹஜ் குழுவிற்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் குறித்து அறிவுரைகள் அளித்தல், பயண ஆவணங்களை வழங்குதல், சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி அளித்தல் முதலிய பல்வேறு பணிகளை தமிழ்நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இக்குழு பல்வேறு பணிகளை மேற்கொள்கிறது.

மேலும் விமான இயக்கம், தங்குமிடங்களில் சோதனைக் கூடங்கள், குடியேற்றம் மற்றும் சுங்கத் தீர்வு, தங்குமிடங்கள் மற்றும் விமான தளம்

ஆகியவற்றில் பாதுகாப்பு, விமான தளத்திற்குச் செல்ல பயணிகளுக்கு போக்குவரத்து வசதி முதலான இதர பணிகளையும் இக்குழு ஒருங்கிணைத்து செயலாற்றுகிறது. இந்திய ஹஜ் குழுவின் முழுமையான அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு செயல்படுகிறது.

**புறப்பாட்டுத்தளம்**

முன்னதாக தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான்–நிகோபார் தீவுகள் ஆகியவற்றைச் சேர்ந்த புனிதப் பயணிகளுக்கு "சென்னை" புறப்பாட்டுத் தளமாக அறிவிக்கப்பட்டது. கொரோனா பெருந்தொற்று காரணமாக, இந்திய ஹஜ் குழுவானது, இந்தியாவிலுள்ள ஹஜ் விமான புறப்பாட்டு தளங்களை 20–லிருந்து 10 ஆக குறைத்து அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பின் படி, ஹஜ் 2022–க்காக தமிழ்நாட்டை சார்ந்த புனிதப் பயணிகளுக்கு சென்னைக்குப் பதிலாக கொச்சின் விமான நிலையம்

புறப்பாட்டுத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஹஜ் பயணிகளின் சிரமத்தை கவனத்தில் கொண்டு நல்ல கட்டமைப்புடன் செயல்படும் சென்னை விமான நிலையத்தை ஏற்கனவே இருந்தது போல் ஹஜ் புறப்பாட்டுத் தளமாக அறிவிக்குமாறு மாநில அரசு ஒன்றிய அரசை கேட்டுக் கொண்டுள்ளது.

### 21.3 அரசால் வழங்கப்படும் மானியங்கள்/ உதவிகள்

### 21.3.1 தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம்.

தமிழ்நாட்டில் உள்ள இஸ்லாமிய பெருமக்கள் தங்களது மார்க்கத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவு செய்ய தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாடு ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டொன்றுக்கு ரூ.1000 இலட்சம் மானியம் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் புனித பயணிகளின் வங்கிக் கணக்கில் மானியத் தொகை நேரடியாக செலுத்தப்படும்.

### 21.3.2 குழுவிற்கான நிர்வாக மானியம்

தமிழக அரசால் அளிக்கப்படும் நிதி உதவிகளைக் கொண்டு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, பணியாளர்களுக்கான நிருவாக செலவினத்தை மேற்கொள்கிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய செலவினங்களை செலுத்துவதற்காக, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஒவ்வோர் ஆண்டும் தமிழக அரசு ரூ.50 இலட்சத்தை நிர்வாக மானியமாக வழங்குகிறது. அதன்படி, 2022–2023 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 21.3.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினர்களை அனுப்புவதற்கு மானியம்

பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், ஹஜ் பயணிகளை தங்க வைக்க கட்டடங்களைத் தேர்வு செய்வதற்கான கட்டடத்தேர்வுக் குழுவில் பிரதிநிதிகளை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கான செலவினத்திற்காகவும், அரசு, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. கொரோனா பெருந்தொற்று (Covid-19) காரணமாக, ஹஜ் 2020 மற்றும் 2021-க்கான பயணத்தை சவூதி அரேபிய அரசு இரத்து செய்தது. எனவே, கட்டட தேர்வுக் குழு பிரதிநிதி மற்றும் ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியா அனுப்பப்படவில்லை. தற்போது, 2022-2023 ஆம் ஆண்டிற்காக ரூ.10.29 இலட்சம் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 21.3.4 இதர மானியங்கள்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தையும் தமிழக அரசு ஈடு செய்கிறது. மேலும் தமிழ்நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் சில உபகரணங்களை அளிக்க, ஒவ்வோராண்டும் தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது.

### முடிவுரை

சிறுபான்மையினரின் காவலனாக இந்த அரசு சிறுபான்மையினருக்கென பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும், நலத்திட்டங்களையும் செவ்வனே செயல்படுத்துவதன் வாயிலாக அவர்களின் நலனையும், பொருளாதார முன்னேற்றத்தினையும் மேம்படுத்திட தொய்வின்றி பாடுபட்டு வருகிறது.

**செஞ்சி கே. எஸ். மஸ்தான்,**
**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை**

# இணைப்பு

## 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

**(ரூபாய் இலட்சத்தில்)**

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு வக்ஃப் வாரியம் மற்றும் ஹஜ் குழு | 2120.47 | – | – | 2120.47 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 73.29 | – | – | 73.29 |
| சிறுபான்மையினர் நல இயக்ககம் | 3129.19 | 1300.00 | – | 4429.19 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 91.84 | – | – | 91.84 |
| **மொத்தம்** | **5414.79** | **1300.00** | **–** | **6714.79** |




விழுப்புரம் மாவட்டத்தில் 05.04.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களால் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன




மாண்புமிகு சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழ்ர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 23.11.2021 அன்று துறை செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது




தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தால் சிறுபான்மையினர் உரிமைகள் தினம்
18.12.2021 அன்று சென்னை சாந்தோம் மேல்நிலைப் பள்ளியில் கொண்டாடப்பட்டது

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.